**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 25.06.2025**
**OS. No. 56/2017**
**வழக்கு சாட்சி DW.1–உஷாராணி, க/பெ.காமேஷ்வரன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) தாவா சொத்து வாதிக்கு சொந்தம் என்று பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். அதற்கு நாங்கள் தாக்கல் செய்துள்ள பதில் குறித்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்து ஆதியில் என் கணவரின் பூர்வீக சொத்து ஆகும். முதல் முதலில் அரசால் தாவா சொத்து யாருக்கு ஒதுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதியின் தந்தை பெயர் தெரியுமா என்றால் தெரியாது. வாதியின் தந்தை பெயர் S.O லட்சுமண கவுண்டர் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்களை சேர்த்து லட்சுமண கவுண்டருக்கு ROC.No.840/1954 ன்படி சொந்தம் என்றால் சரியல்ல. லட்சுமண கவுண்டருக்கு மொத்தம் நான்கு வாரிசுகள் இருந்தார்கள். லட்சுமண கவுண்டருக்கு நான்கு பெண் வாரிசுகள் மற்றும் இரண்டு ஆண் வாரிசுகள் என்றால் எனக்கு தெரியவில்லை. அவர்களின் பெயர் ராஜம், கோவிந்தம்மாள், முனுசாமி (வாதி), கோவிந்தராஜ், லட்சுமி, சகுந்தலா என ஆறு வாரிசுகள் உள்ளனர் என்றால் எனக்கு தெரியவில்லை.

2) மேற்கண்ட சகுந்தலா அவர்களின் மகன் பெயர் காமேஷ்வரன் என்றால் சரிதான். காமேஷ்வரன் அவர்களின் மனைவி தான் நான் என்றால் சரிதான். எனக்கு திருமணம் 01.07.2007 ல் நடைபெற்றது. எங்கள் திருமணத்திற்கு முன் என் தந்தையின் வீட்டில் தான் நான் குடியிருந்தேன் என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்பு தான் பட்டா மாறுதல் கோரி மனு செய்தேன் என்றால் சரிதான். எந்த தேதியில் மனு செய்தேன் என்றால் தேதி எனக்கு தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் பட்டா மாறுதல் கோரும் மனு தான் நான் கொடுத்த மனு என்றால் சரிதான். அந்த மனுவுடன் வாக்காளர் அடையாள அட்டை, பொதுமக்கள் வாக்குமூலம் ஆகியவற்றை கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

3) அந்த மனுவில் எந்த தேதியில் கொடுத்தேன் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். **அந்த மனு பி.வா.சா.ஆ.1 ஆகு குறியீடு செய்யப்படுகிறது.** அதில் முகவரியாக க.எண்.16/151 என்று குறிபிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த மனுவில் தாவா சொத்தில் நான் 15 வருடங்களாக அனுபவத்திலுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், திருமணம் ஆன பெண்களுக்கு பட்டா வழுங்கப்படுவதால், என் கணவர் இருந்து வந்ததையும் சேர்த்து சொல்லியுள்ளேன். 2006 ம் வருடம் எனக்கு வயது 22 என்றால் சரிதான். 1994 ம் வருடம் எனக்கு 10 வயது என்றால் சரிதான்.

4) எனக்கு திருமணம் ஆன போது என் கணவர் MLA விடம் PA வாக இருந்தார் என்றால் சரியல்ல. நாங்கள் பட்டா கோரி மனு செய்வதற்கு முன்னரே வாதி பட்டா வழுங்ககூடாது என்று அனைத்து அலுவலர்களுக்கும் மனு செய்திருந்தார் என்றால் சரியல்ல. இருந்தபோதும் எங்கள் செல்வாக்கை பயன்படுத்தி மோசடியாக பட்டா பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலுவையிலுள்ள சமயத்தில் பட்டா வழுங்ககூடாது என்று 04.10.2017 ம் தேதியில் வாதி அனைத்து வருவாய் அலுவலர்களுக்கும் மனு கொடுத்துள்ளார் என்றும், அதன் நகலை எனக்கும் அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். நான் க.எண்.10/20A5 என்ற முகவரியில் தான் மேற்கண்ட அறிவிப்பை பெற்றுள்ளேன் என்றால் சரிதான். **மேற்கண்ட மனு பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் தாவா சொத்தில் குடியில்லை என்றும், வேறு ஒரு இடத்தில் தான் குடியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு 17.07.2025 ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.